இஸ்லாத்தில் போருக்கான ஒழுக்கங்கள்

இஸ்லாம் அடிப்படைக் கொள்கைகள், மதித்து நடத்தல், ஒழுக்கப்பண்புகள், நீதி மற்றும் நியாயம், கருணை காட்டுதல் மற்றும் சகிப்புத்தன்மையின் மார்க்கமாகும். இஸ்லாம் இந்தக் கொள்கைகளின் அடிப்படையில் அதன் எதிரிகளுடன் அவர்களை எதிர்கொள்ளும்போதும் மிகவும் உறுதியுடன் செயலாற்றுகின்றது. இறைத்தூதர் ﷺ அவர்கள் மற்றும் அவர்களுடைய நபித்தோழர்களை மக்காஹ்விலுள்ள இறைமறுப்பாளர்கள் அளவுக்கு அதிகமாகவே கொடுமைகளை இழைத்துத் துன்புறுத்தியது வரலாற்று உண்மையாகும். ஆனால், முஸ்லிம்களுக்கு அல்லாஹ் தஆலா வெற்றியைக்கொடுத்திருந்த நிலையில், இணை வைப்பாளர்களைப்பற்றி முடிவு செய்யும் அதிகாரம் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் மட்டுமே இருந்தது. இணை வைப்பாளர்கள் அவர்களுக்கெதிராக இறைத்தூதர் ﷺ அவர்கள் மிகக் கடுமையான பழிவாங்கும் நிலையினை மேற்கொள்வார்கள் என்று கருதி அஞ்சினர். ஆனால், அகிலங்களுக்கும் கருணையாக அனுப்பப்பட்ட இறைத்தூதர் ﷺ அவர்கள், அவர்கள் அனைவருக்கும் மன்னிப்பு வழங்குவதாக அறிவித்தவர்களாகக் கூறினார்கள்:

اذْهَبُوا فَأَنْتُمُ الطُّلَقَاءُ (سنن البيهقي)

பொருள்: *செல்லுங்கள், நீங்கள் விடுதலை செய்யப்பட்டுவிட்டீர்கள் (பைஹகி)*

www.uzairlahi.com

இறைத்தூதர் ﷺ அவர்கள் தங்களுடைய படைவீரர்களுக்கு எப்போதும் அறிவுறுத்துவார்கள்:

اغْزُوا بِاسْمِ اللهِ فِي سَبِيلِ اللهِ، قَاتِلُوا مَنْ كَفَرَ بِاللهِ، اغْزُوا وَلَا تَغُلُّوا، وَلَا تَغْدِرُوا، وَلَا تَمْثُلُوا، وَلَا تَقْتُلُوا وَلِيدًا (مسلم، الترمذي، أبو داؤد)

பொருள்: *அல்லாஹ்வின் பெயரைக்கொண்டு அல்லாஹ்வின் பாதையில் போரிடுங்கள், இறைவனை நிராகரிப்பவர்களுக்கு எதிராகப் போரிடுங்கள், ஆனால், நிபந்தனைகளை மீறாதீர்கள், போர்ப்பொருட்களைத் திருடாதீர்கள், எதிரிகளின் (உடல்களின்) கை கால்களைத் துண்டிக்காதீர்கள், சிறு குழந்தைகளைக் (வயதுவராத, போரிடும் தகுதியில்லாத குழந்தைகளைக்) கொல்லாதீர்கள் (முஸ்லிம், திர்மிதி, அபூ தாவூத்).*

இஸ்லாம் பழிவாங்கும் போக்கினைக் கடைபிடிப்பதில்லை மற்றும் மக்காஹ்வின் இறைமறுப்பாளர்கள் உஹது போரில் ஷுஹதாக்களின் தலைவராகக் கருதப்படும் ஹஜ்ரத் ஹம்ஸஹ் பின் அப்துல் முத்தலிப் (ர) மற்றும் சில ஷஹீதானவர்களுடைய உடல்களைக் கை, கால்களைத் துண்

டித்து அவமதித்ததுபோன்று போரில் கொல்லப்படும் எதிரிகளின் உடல்களின் கை, கால்கள், காது, மூக்கு ஆகியன துண்டித்து இழிவுபடுத்துவதற்கு அனுமதிப்பதுமில்லை. இஸ்லாம் பரஸ்பர சகிப்புத்தன்மை மற்றும் நீதியை நிலைநாட்டும் மார்க்கமாகும். இஸ்லாம் அமானிதங்களில் துரோகம் செய்தல், வாக்குறுதி மீறுதல், மரங்களை வெட்டுதல் மற்றும் அவற்றை தீக்கிரையாக்குதல், கால்நடைகளைக் கொல்லுதல், வீடுகள் மற்றும் பயிர்களை அழித்து நாசமாக்குதல் அகியவற்றை தவிர்க்க முடியாத, ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட நிலையினைத்தவிர எப்போதுமே ஹராமானதாக ஆக்கியுள்ளது. இவ்வாறு செய்வது, எதிரி வேறு வழியின்றி தம்மைத்தாமே சமர்ப்பித்து சரணடையும் வகையில் நிர்ப்பந்தப்படுத்துவதற்காக மட்டுமே. இவ்வாறு, இறைத்தூதர்ﷺ அவர்கள் சில போர்களில் யூதர்களுக்கு எதிராக செய்துள்ளார்கள்.

முஸ்லிம்கள் எப்போதுமே தங்களுடைய எதிரிகளுடன் மன்னித்து மறக்கும் போக்கினையே கடைபிடித்துள்ளனர் என்பதற்கு வரலாறு சான்றாக இருக்கின்றது, எப்போதுமே அவர்கள் வாக்கு மீறியதில்லை. அமீருல் மூமினீன் ஹஜ்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர்கள் பைதுல் முஃகத்தஸின் சாவியை ரோமர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்காக பாலஸ்தீனம் சென்றடைந்தபோது, அங்கே தொழுகைக்கான நேரம் வந்துவிட்டது. அவர்கள்கிறித்துவர்களுடைய ஆலயத்திலிருந்து வெளியே வந்து தொழுகையினை நிறைவேற்றினார்கள், அவர்களுடைய இச்செயலினை அடிப்படையாகக்கொண்டு பிற்காலத்தில் முஸ்லிம்கள் கிறித்துவர்களுடைய ஆலயங்களை மஸ்ஜிதுகளாக ஆக்கிக் கொள்ளக்கூடாது, அதற்கு இடமளிக்கக்கூடாது என்பதற்காகவே இவ்வாறு செய்தார்கள்.

இஸ்லாமிய வரலாற்றில் பிற்காலத்திலும் முஸ்லிம்களுடைய இந்த மன்னித்து மறக்கும் பண்பு மற்றும் சகிப்புத்தன்மை அனைவருக்குமே ஆச்சரியத்துக்குரிய ஒரு விஷயமாகவே இருந்தது. உதாரணமாக, முஹம்மத் பின் ஃபாதிஹ் (ரஹ்) அவர்கள் ஃகுஸ்துன்தூனியாவை வெற்றிக்கொண்டபோது அவர்கள் கிறித்துவர்களுடைய ஆலயங்களை அவர்களுடைய வணக்க வழிபாட்டிற்காக விட்டுவிட்டார்கள் மற்றும் கிறித்துவ மதக்குருக்களுடன் மிகவும் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடந்துகொள்வார்கள். அவர்களுள் சிலர் எங்களுக்கு மரியாதை, கண்ணியம் மற்றும் விருந்தோம்பல் எந்த அளவிற்கு முஸ்லிம்களிடத்தில் கிடைத்ததோ அந்த அளவிற்கு கிறித்துவ சமுதாயத்தினரிடமிருந்தும்கூட கிடைக்கவில்லை என்று கூறும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

* * *

www.uzairfalahi.com